


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 335

செவ்வாய்க்கிழமை
28 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


# மாகாணத் தேர்தலுக்கு ஏராளமான தடைகள்!

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 28**

**மா**காணசபைத் தேர்தலை நடத்துவதில் ஏராளமான தடைகள் காணப்படுகின்றன. அந்தத் தடைகள் அனைத்தும் நீக்கப்பட்ட பின்னரே தேர்தல் நடத்தப்படும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

11

## தெற்குக்கு கறுப்பு முத்திரை வடக்குக்கு வெள்ளையடிப்பா?

### குமுறுகின்றார் லக்ஷ்மன் யாப்பா



கொழும்பு, ஒக். 28
ஆயுதக்குழு விடயத்தில் தெற்குக்கு கறுப்பு முத்திரை குத்திவிட்டு, வடக்குக்கு வெள்ளையடிப்பு செய்யும் நடவடிக்கையே தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இடம்பெறுகின்றது

11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## இணைய வழிச் செயலிமூலம் இனி அபராதம் செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாணத்தில் இணையவழி செயலி மூலம் (GovPay) போக்குவரத்து அபராதம் செலுத்தும் முறை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்

11

திருத்தல் பணிகள் காரணமாக

## வடக்கின் ரயில் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஒக். 28
வடமாகாண ரயில் போக்குவரத்து நாளைமறுதினம் தொடக்கம் ஒரு வாரத்துக்கு பகுதியளவில் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
வடமாகாண

11

## செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி இன்று போர்!

யாழ்ப்பாணம், ஒக். 28
அரியாலை செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி, யாழ்ப்பாணம் செம்மணி வளைவுக்கு அருகில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இலங்கை மெதடிஸ்த திருச்சபை, நீதிக்கும்

11



படம்:- ஐ. சிவசாந்தன்

## இந்து ஆலயங்களில் சூரசங்கார உற்சவம்!

யாழ்ப்பாணம், ஒக். 28
இந்து ஆலயங்களில் நேற்று சூரசங்கார உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.
நல்லூர் முருகன் கோவிலில் நேற்று மாலை 4 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை

11

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில்

## 11.600 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபரொருவர் கைதானார்

புத்தம்புதிய வாகனமும் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில், பதிவு செய்யப்படாத புத்தம்புதிய வாகனத்தில் பெருமளவு ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால்

11

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 28
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் பகுதியில் ஹெரோய்னை உடைமையில்

11

## தேசிய அரசியலுக்குள் நுழைய ஆயுததாரிகள் கடும் முனைப்பு!

### பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 28
போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் ஆயுததாரிகள் தேசிய அரசியலுக்குள் நுழைவதற்கு எத்தனிக்கின்றனர் என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார். இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
போதைப்

11

## வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையருக்கு வாக்குரிமை

கொழும்பு, ஒக். 28
வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்க

11



முச்சந்தி முரளி

'இதில கூட வடக்கு தெற்கு எண்டு பிரிவினை காட்டுறதுதான் உவையின்ர குணம் கண்டியளோ'

## மீளவும் அமைக்கப்படவுள்ள குமரப்பா, புலேந்திரன் தூபி!

### சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 28
சாவகச்சேரியில் வீதி யோரத்தில் இடித்தழிக்கப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டவர்களின் நினைவுத்தூபியை மீளவும் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபை

11

சர்வதேச ரீதியில்

## உலகின் சிறந்த சுற்றுலா நகரங்கள் யாழ்ப்பாணத்துக்குப் பிரதான இடம்!

கொழும்பு, ஒக். 28
2026ஆம் ஆண்டில் உலகளவில் சுற்றுலா செல்லக்கூடிய மிகச் சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணமும் பட்டியலிடப்பட்டுள்ளது.
உலகளாவிய சுற்றுலாசார் ஊடக நிறுவனமான 'லோன்லி பிளானட்', 2026ஆம் ஆண்டில்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4237
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 07 | 31 | 49 | 77
விசேட எழுத்து: M

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1304
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 12 | 23 | 32 | 60

**NLB ஜய**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0263
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 2 | 0 | 2 | 9

**மெகா பவர்**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2343
ஆங்கில எழுத்து: O
சுப்பர் இலக்கம்: 24
வெற்றி இலக்கங்கள்: 20 | 49 | 54 | 60

**மஹஜன சம்பத**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5995
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 8 | 5 | 6 | 3 | 4 | 7

**தன நிதானய**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2025
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 19 | 41 | 61 | 67
விசேட எழுத்து: T

**சுப தவசக்**
திகதி: 27.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0111
வெற்றி இலக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 37 50 66

# நீரூடாகப் பரவும் நோய்கள் சீரற்ற காலநிலையில் உயர்வு

## பொதுமக்கள் அவதானம்!



**கொழும்பு, ஒக். 28**
**சீரற்ற காலநிலை காரணமாக, நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரித்துவருகின்றன என்று சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நுளம்புகள் இனப்பெருக்கம் செய்வதற்கு மழைநீர் ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதால், டெங்கு, லெப்டோஸ்பிரோசிஸ், ஹெபடைடிஸ் ஏ, டைபாய்டு மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் வேகமாகப் பரவக்கூடும்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகள் நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற இடங்களாக மாறும். வெள்ளநீர் விலங்குகளின் சிறுநீருடன் கலந்து, லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது எலிக்காய்ச்சல் பரவவழிவகுக்கும். விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் வெள்ளம் அல்லது சேறு நிறைந்த பகுதிகளில் வேலை செய்பவர்கள் அல்லது நடந்து செல்பவர்கள் இதுதொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். அவர்கள் பாதணிகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளை அணியவேண்டும். காய்ச்சல், தலைவலி, சளி அல்லது தசைவலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். வெள்ளத்தின்போது மக்கள் பெரும்பாலும் கிணறுகள் அல்லது ஓடைகளிலிருந்து வரும் அசுத்தமான தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள், இது இந்தத் தொற்றுநோய்களின் அபாயத்தை ஏற்படுத்தும் என்பதால் அதனைத் தவிர்க்கவேண்டும்-என்றும்சுகாதாரநிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 0703
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கம்: 6 3 0 0 9 3

**Super Ball**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2969
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கம்: 15 56 63 79

**சனிதா**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கம்: 30 33 37 80
வெற்றி வாரம்: 5130

**லக்ன ராசி**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம்: 12 18 23 46
சீட்டிழுப்பு வாரம்: 4681

**KAPRUKA**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 19
வெற்றி இலக்கம்: 06 11 61 66
வெற்றி வாரம்: 2145

**அத கோடிபதி**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கம்: 22 27 28 52
வெற்றி வாரம்: 2795

**JAYODA**
திகதி: 27.10.2025 | தினம்: திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கம்: 01 02 26 43
வெற்றி வாரம்: 2173

# இ—விசா வழங்குநர்களால் 1.4 மில். டொலர் நிலுவை!

## அரசுக்கு வருவாய் இழப்பு கணக்காய்வில் தகவல்

கொழும்பு, ஒக்.28
இலத்திரனியல் விசாத் திட்டத்துடன் தொடர்புடைய சேவை வழங்குநர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத்தவேண்டிய 1.4 மில்லியன் டொலருக்கும் அதிகமான வரிகளைச் செலுத்தத் தவறியுள்ளனர் என விசேட கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு வரி செலுத்தாமையால் அரசாங்கத்தின் மொத்த வரி இழப்பு 14 இலட்சத்து 18 ஆயிரத்து 360 டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் நிறுவனங்கள் 3 இலட்சத்து 73 ஆயிரத்து 991 விசா விண்ணப்பங்களைக் கையாண்டுள்ளன என்றும், குறைந்தபட்சம் 6.9 மில்லியன் டொலர் சேவை கட்டண வருவாயை ஈட்டியுள்ளன என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் விசாக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்குச் சேவைக் கட்டணங்கள் விதிக்கப்பட்ட விசா கட்டண விலக்கு நாடுகளிலிருந்து இந்த நிறுவனங்கள் மேலதிகமாக 1.8 மில்லியன் டொலரை ஈட்டியுள்ளன. இது முந்தைய இலத்திரனியல் பயண அனுமதி முறைமையின்கீழ் உருவாக்கப்பட்டிருக்காத வருமானமாகும்.

வரி செலுத்தத் தவறியமை, விசேட கணக்காய்வு அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட முறைகேடுகளில் ஒன்றாகும்.

இது இ-விசாத் திட்டத்தை வழங்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஏற்பட்ட நடைமுறைத் தவறுகள், வருவாய் இழப்புகள் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அரசியற் கட்சிப் பதிவுக்கு 76 குழுக்கள் விண்ணப்பம்

கொழும்பு, ஒக். 28
அரசியற் கட்சிகளாகப் பதிவுசெய்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவிடம் 76 குழுக்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன.

இந்த விண்ணப்பங்கள் தொடர்பாக தற்போது நேர்காணல்கள் நடைபெற்றுவருகின்றன. அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் மேல் மாகாணத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது 83 அரசியற்கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (ச-இ)

# யானைகளை மீளப்பெறுவதில் அரசமட்டத்தில் ஏற்பாடில்லை!

## தாய்லாந்து தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28
தாய்லாந்தால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 'தாய் ராஜா' மற்றும் 'கண்டுலு' ஆகிய யானைகளை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுசெல்வது தொடர்பாக அரசாங்க மட்டத்தில் இதுவரை எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை என்று தாய்லாந்துத் தூதுவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் சமூக ஊடகங்களில் பரவிவரும் செய்திகளில் உண்மை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை முத்துராஜா யானை கொண்டுசெல்லப்பட்ட பின்னர் தற்போது நாட்டில் உள்ள தாய்லாந்து யானைகள் இரண்டில் ஒன்றான 'தாய் ராஜா'வின் உடல்நிலை தமது மேற்பார்வையின் கீழ் இருப்பதாகவும், அந்த யானை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவபீடத்தின் பேராசிரியர் அசோக தங்கொல்ல கூறியுள்ளார். (ச-இ)

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பி. ஒப்பந்தம் கைச்சாத்து



கொழும்பு, ஒக். 28
தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கமான ஜே.வி.பி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

ஜே.பி.வி.யின் தேசிய சபை உறுப்பினருமான, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அண்மையில் சீனாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் உரையாடினார். அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறைத் தலைவர் லியு ஹைக்சிங் உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், சீனாவுடன் அரசியல் உறவை மிக ஆழமாகவும் சோசலிசக் கொள்கைக்கு ஏற்ப மேம்படுத்தவும் எடுத்துள்ள செயற்பாடுகளின் ஒரு பகுதியாக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற நிலையில் நாட்டில் 17,000 சிறுவர்கள்

கொழும்பு, ஒக்.28
மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள 17ஆயிரம் சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். ஜனாதிபதி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் உயர் கல்விச் சிறந்த மாணவர்களைப் பாராட்டும் வடமேல் மாகாண நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து மட்டங்களிலும் உள்ள சிறுவர்கள் அரசாங்கத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். எந்தவொரு சிறுவர்களையும் கைவிடாமல், ஒவ்வொரு சிறுவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காக வாழத் தகுதியான ஒரு நாட்டை உருவாக்க ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## போதைப்பொருள் வியாபாரம்; பெண் கைது

மட்டக்களப்பு, ஒக்.28
ஏறாவூர்ப் பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 56 வயதான பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மாவட்டப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஏறாவூர் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் குறித்த பெண்ணின் வீட்டை முற்றுகையிட்டு நேற்றுமுன்தினம் சோதனையிட்டபோதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடம் இருந்து 5 ஆயிரத்து 350 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், இதன் மூலம் ஈட்டிய 3 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## வெலிகம சந்தேகநபர்கள் எவ்.சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 28
வெலிகம பிரதேசசபைத் தவிசாளரின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி உள்ளிட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நிதிக் குற்றவிசாரணைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வெலிகம பிரதேசசபைத் தவிசாளர் கொலை தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபரின் கீழ் 10 ஆய்வுக்குழுக்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கெக்கிராவவில் பெண் ஒட்பட 3 பேர் கைதுசெய்யப்பட்டனர். அங்கிருந்து தப்பிச் சென்ற துப்பாக்கிதாரி நாவின்னவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

குற்றச்செயலுக்காகப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், 12 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பணம், ஹெரோய்ன், ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் சந்தேகநபர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (எ-25-இ)



## ஞாயிறு சோதனையில் 781 பேர் கைது


கொழும்பு, ஒக்.28
நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 884 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 781 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 17 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 305 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 180 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 26 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 25 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## பத்மேவின் சொத்துகளை முடக்குவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஒக்.28
பாதாள உலகக்கும்பல் உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மேவின் சொத்துகளைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்போதைக்கு கெஹெல்பத்தர பத்மேவுக்கு உரித்தான சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் சட்டவிரோதச் சொத்து சேகரிப்பு விசாரணைப் பிரிவினரால் இனங்காணப்பட்டுள்ளன. பண்ச்சலவைச் சட்டத்தின்கீழ் குறித்த சொத்துகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அவற்றை அரசுடைமையாக்கசட்டவிரோதசொத்துச் சேகரிப்புவிசாரணைப்பிரிவின் பொலிஸார் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதேபோன்று இன்னும் பல பாதாள உலகப்புள்ளிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்வது தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. (ச)

## 2 கிலோ ஹெரோய்னுடன் இந்திய நாட்டவர் கைது!

கொழும்பு, ஒக்.28
84.96 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் 32 வயதான இந்தியப் பிரஜை எனத் தெரியவந்துள்ளது. அவரிடமிருந்து 2 கிலோ 832 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜையை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)






## கையில துண்டு, பையில காசு!

பிழைப்புகள் பலவிதம், ஒவ்வொண்டும் ஒருவிதம். அதிலையும் பிழையாப் பிழைக்கிறதுக்கெண்டே கனபேர் வெளிக்கிட்டிருக்கினம். ஆனால் அவையின்ர காட்டிலதான் இப்பமழை. அலுங்காமல், குலுங்காமல், நோகாமல் பிழைக்கிறதுக்கு நல்ல மூலதனம் எதுவெண்டால், அது அடுத்தவையின்ர அனுதாபம்தான். பாக்கிற எல்லாருக்கும் அனுதாபத்தை வரவைச்சு, அதைக் காசாக்கிற வித்தை சிலருக்கு மட்டும்தான் வாலாயப்படும். அப்பிடியான சில பஸ்ஸுகளை வைச்சு உழைக்க வெளிக்கிட்டிருக்கினம்.

கிட்டடியில திருகோணமலையில இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருத்தர் பஸ்ஸில வந்திருக்கிறார். தூரப்பயணம் எண்டதாலையும், பயண அலுப்பாலையும் அவர் சீற்றிலை தலையைச் சாய்ச்சபடி, கொஞ்சம் கண்ணைமூடிக்கொண்டு நித்திரையாப் போட்டார். பஸ் கிளிநொச்சிக்கு வர, திடீரெண்டு ஆரோ அவரைத் தட்டியெழுப்ப, ஆள் கண்ணை முழிச்சுப் பார்த்திருக்கிறார்.முன்னுக்குப் பறட்டத் தலை, தாடி மீசையோட, கொஞ்சம் சொருகினமாதிரி கண்ணோட ரண்டு பேர். என்னத்துக்கு அவை தன்னை எழுப்பினவை எண்டு இவர் யோசிக்கமுதலே, அந்த ரண்டுபேரும் இவரின்ர கையில போட்டோக்கொப்பி அடிச்ச துண்டைக் குடுத்திட்டு அடுத்த சீற்றுக்குப் போட்டினம். அதுக்குப் பிறகுதான் இவர் சுத்துமுத்தும் பார்த்திருக்கிறார். எல்லாரின்ர கையிலையும் அதே துண்டு . முந்திச் செக்பொயின்ரில ஆமிக்காரர் இப்பிடித்தான் பஸ்ஸில ஏறி. ஒவ்வொரு சீற்றிலையும் இருக்கிறவையின்ர ஐடெண்டிக் கார்ட்டை வாங்கி செக் பண்றவங்கள். அதைமாதிரித்தான் இந்த ரண்டுபேரும் அந்த பஸ்ஸில இருந்த எல்லாருக்கும் அந்தத் துண்டைக் குடுத்திருக்கினம். சிலர் அவை நீட்டின துண்டைக் கவனிக்காதமாதிரி இருக்க, இவையள் அவையின்ர கையைப் பிடிச்சு பலவந்தமா அந்தப் போட்டோக்கொப்பித் துண்டைத் திணிச்சுப்போட்டு போட்டினம்.

அப்பிடி எல்லாருக்கும் குடுக்கிற அளவுக்கு துண்டில என்னதான் இருக்கெண்டு இவரும் வாசிச்சுப் பார்த்திருக்கிறார். எங்கையோ ஒரு சிங்கள இடத்தில ஒரு சின்னப்பிள்ளைக்கு கடும் வருத்தம். அந்தப் பிள்ளையின்ர உயிரைக் காப்பாத்துற ட்ரீட்மெண்டுக்கு லட்சக்கணக்கில காசு தேவையாம். அதுக்கு உதவி கேட்டுத்தான் இந்தத் துண்டை இவையள் குடுத்திருக்கினம். ஆனால் துண்டைக் குடுத்த ஆக் களுக்கும் அந்தக் குழந்தைக்கும் என்ன சம்பந்தம் எண்டு ஆருக்கும் தெரியாது. அந்தத் துண்டிலையும் இவையைப் பற்றிச் சொல்லுப்படேலை. அதோட இவையின்ர கோலமே, அவை குழந்தைக்காக காசு சேர்க்கேலை, குடிக்காகத்தான் காசு சேர்க்கினம் எண்டதைச் சொல்லாமல் சொல்லிச்சுது. அதால திருகோணமலையால வந்தவர் காசொண்டும் குடுக்காமல் அந்தத் துண்டைத் திருப்பிக் குடுத்திருக்கிறார். அதுக்கு அந்த ரண்டு பேரும்'மாத்தையா உதவி செய்ய காசு குடுங்க'எண்டு உறுக்கிற மாதிரிக் கேட்டிருக்கினம். காசு குடுக்காட்டி அதுக்க வைச்சே அடிச்சிடுவாங்கள் போல கிடந்திருக்கு. அதால அவர் பேசாமல் ஐம்பது ரூபாவை அந்தத் துண்டோட குடுக்க, அவரைப் பேசிக்கொண்டு அங்கால போட்டாங்கள். இப்பிடி அந்தத் துண்டோட சேர்த்து காசு குடுக்காதவையிட்ட வெருட்டி காசு வாங்கிப் போட்டுத்தான் அந்த ரண்டுபேரும் இறங்கினவை.

இப்பிடித் தங்கட பஸ்ஸில, தங்களை நம்பி ஏறிவந்த சனத்திட்ட ரண்டுபேர் வந்து வெருட்டி, காசை வாங்கிக் கொண்டு போறவைய டிரைவரோ,கொண்டக்டரோ ஏனெண்டும் கேக்கேலை. 'இப்பிடியானவையை ஏன் பஸ்ஸுக்க ஏற விடுறீங்கள்? உப்பிடியானவையால பயணம் செய்யிறவைக்கு ஆபத்தெல்லோ'எண்டு திருகோணமலையால வந்தவர் கேட்டிருக்கிறார். ஆனால் அதுக்கு 'இதைவிட யாழ்ப்பாணத்தில எத்தினைபேர் கோடிக்கணக்கில தட்டிச் சுத்துறாங்கள். அதைவிட்டிட்டு இதைவந்து கேக்கிறியள்'எண்டு டிரைவரும், கொண்டக்டரும் மோட்டுவளமாச் சொல்லியிருக்கினம். இப்பிடி அந்த வருத்தம், இந்த வருத்தம் எண்டு சொல்லி, கையில போட்டோக்கொப்பித் துண்டோட காசு பறிக்கவெண்டு கனபேர் பஸ்ஸுகளில ஏறுகினம். அப்பிடி அனுதாபத்தை வைச்சு குடிக்காக சனத்தின்ர காசைப் பறிக்கிறவையிட்ட இருந்து எப்பதான் விடுதலை கிடைக்கப்போகுதோ?

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சிதரும்.

**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்வது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். வெளியில் செல்லும்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். வியாபாரத்தில் பணியாளர்கள் நல்லபடியாக செயற்பட்டு விற்பனையை அதிகரிப்பார்கள்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை எளிதில் முறியடிப்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரித்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். அவர்கள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாழ்க்கைத் துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக் கும் வாய்ப்பு உண்டு.

# வடக்குத் திணைக்களங்களில் நேரமுகாமைத்துவம் அவசியம்

## ஆளுநர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஒக்.28**

**வடக்கு மாகாணசபைக்கு உட்பட்ட திணைக்களங்கள் அனைத்திலும், நேர முகாமைத்துவம் பின்பற்றப்படவேண்டும். திணைக்களத்தலைவர்கள் முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும். அத்துடன் சிறப்பாகச் செயற்படும் பணியாளர்களை ஊக்குவிக்கும்வகையில் அவர்களுக்கான கௌரவிப்புகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

5 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு திணைக்களத்தில் பணியாற்றும் பணியாளர்களை இடமாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். தகுதியில்லாத திணைக்களத் தலைவர்கள் அல்லது பணியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கான இடமாற்றங்கள் அல்லது நடவடிக்கைகள் தயவு தாட்சண்யமின்றி எடுக்கவேண்டும். தனியே யாழ்ப்பாண மாவட்டம் மாத்திரம் வடக்கு மாகாணம் அல்ல. ஆளணிகள் முழுவதையும் யாழ்ப்பாணத்தில் வைத்திருக்கமுடியாது. ஏனைய 4 மாவட்டங்களுக்கும் யாழ். மாவட்டத்திலிருந்தே ஆளணிகளைப் பங்கீடு செய்யவேண்டியுள்ளது. அந்தப் பங்கீட்டை உரியவாறு முன்னெடுக்கவேண்டும்.

மாவட்டங்கள், பிரதேசங்களுக்கு என்று நிதிகளைப் பங்கீடு செய்யாமல் எந்தப் பிரதேசங்களுக்குத் தேவைகள் அதிகமோ அங்கு கூடியளவு நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதற்கு ஏற்றவாறே திட்டங்களும் தயாரிக்கப்படவேண்டும். கடல் கடந்த தீவுகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஆபத்துக் கொடுப்பனவை, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையை அடிப்படையாகக்கொண்டு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் – என்றார். (சு-113)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.28

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் தெல்லிப்பழை மாவைகலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடத்தப்படும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி சி.கா. கமலநாதனின் "இரவாதஞ்செய்த படலம்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ41)

★★★

யாழ்ப்பாணம், ஒக்.28

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடர் சொற்பொழிவு எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கோவில் சண்முகவிலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஶ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி.தயாநாதன் தலைமையுரையையும், சைவப்புலவர், பிரசங்கபூஷணம் க.கைலநாதன் "புதல்வரைப்பெறு படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவை யும் நிகழ்த்துவர். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப்பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



# கடமையை ஏற்றார் யாழ். பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ். பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சிவகாமி உமாகாந்தன் நேற்றுத் திங்கட்கிழமை தனது கடமையை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார். யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ். பிரதேச செயலராகக் கடமையாற்றிய சாம்பசிவம் சுதர்சன் கடந்த வாரம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பொறுப்பேற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பதிலாக இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது. (ச-66,9,27)

# கூட்டுறவுதின விழா

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் நடத்தும் 103ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பரிசில்கள் வழங்கல், கௌரவிப்புகள் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அ.கூ.ச.சமாசத் தலைவர் சி.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான அகல்யா செகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன், தலைமை அலுவலகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.சிவகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ப.கேசவதாசன், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.விஜயமோகனராசா, யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் க.கமலநாதன், யாழ்ப்பாண மக்கள் வங்கி முகாமையாளர் க.றமேஸ்நேசன், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பா.பாலரவி, யாழ். மா.ப.தெ.வ.அ.கூ.நி.பணி.நல.கூ.சங்க உபதலைவர் து.தங்கநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# அடிப்படையில் பிழை...!

கொடிகாமத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில், உழவியந்திரத்தில் பயணித்த இளைஞர்மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கின்றனர். இந்தத் தாக்குதலில் உயிருக்கு ஆபத்தற்ற - அதேநேரம் ஆழமான காயங்களுடன் - அந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். 'மணல் கடத்தலில் ஈடுபட்டார். எமது உத்தரவை அவர் மீறிச் சென்றதாலேயே சுட்டோம்' என்பதே இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்குப் பொலிஸார் வழங்கும் விளக்கத்தின் சாராம்சமாக அமைந்துள்ளது. துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான நபர், சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டாரா? இல்லையா? என்பது இங்கு விடயமல்ல. பொலிஸார் ஏன் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள்? அதற்குக் காரணம் என்ன? இந்த விடயங்களே தற்போது ஆராயப்படவேண்டியவை.

மிகச் சாதாரணமாக அணுகப்படவேண்டிய விடயத்தில் பொலிஸார் ஆயுதபலத்தை வெளிப்படுத்துவதும், துப்பாக்கிச்சூடு நடத்துவதும் இதுவொன்றும் முதல்முறையல்ல. மிக நீண்ட காலமாக இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. உச்சக்கட்டமாக, 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம்- கொக்குவில் பகுதியில் வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன் மற்றும் கஜன் ஆகிய இருவர் பொலிஸாரின் துப்பாக்கி வேட்டுகளால் கொல்லப்பட்டனர். இதுபோன்ற அசம்பாவிதம் மீண்டும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக, வடக்கு- கிழக்கு ரீதியில் அப்போது பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பொலிஸ் தரப்பில் இருந்து ஏராளமான வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன. ஆனால், அதற்குப் பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கின்றனர் - சிவிலியன்கள் காயமடைந்திருக்கின்றனர்.

ஒரு பிரச்சினையை அல்லது கணநேர நிகழ்வை எதிர்கொள்ளும் பக்குவமும் தெளிவும் பொலிஸாருக்கு இல்லை என்பதையே இந்த விடயங்கள் வெளிப்படுத்துகின்றன. டுபாய், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளில் பொலிஸாருக்கு அதிவேக வாகனங்கள் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம், துப்பாக்கிச்சூட்டை மேற்கொள்ளாமல், குற்றவாளிகளை அல்லது சந்தேகநபர்களை விரட்டிப் பிடிப்பதே. உலக நாடுகளின் பொலிஸ் நியதி இவ்வாறிருக்கையில், 'உழவியந்திரத்தில்' பயணித்தவர் நிற்கவில்லை என்பதற்காக துப்பாக்கிச்சூடு நடத்தி 'கெத்துக் காட்டியிருக்கின்றனர்' இங்குள்ள பொலிஸார். மணலுடன் உழவியந்திரத்தில் சென்ற சந்தேகநபரை விரட்டிப்பிடிக்கமுடியவில்லை என்றால், எதற்காக 250 தொடக்கம், 500, 600 வலுவுள்ள (சிசி) வாகனங்களைப் பொலிஸார் வைத்திருக்கின்றனர். பொலிஸாருக்காகக் குறித்தொதுக்கப்பட்ட வாகனங்கள் அவர்களின் போக்குவரத்துக்கானவையல்ல. குற்றப்பிரதேசத்தை விரைவாக அணுகுவதற்கும், சந்தேகநபர்களை விரட்டி மடக்கிப் பிடிப்பதற்கும்தான். எனவே, கொடிகாமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெறவேண்டும். அத்துடன், எதற்கெடுத்தாலும் துப்பாக்கிச்சூடு என்ற மனோநிலை களையப்படுவதற்கான அடிப்படை மாற்றங்களும் விரைவில் ஏற்படுத்தப்படவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




**நாளொரு நல்வார்த்தை**

தீயவனை நண்பனாக்கிக் கொள்வதைவிட தனிமையை நண்பனாக்கிக் கொள்வது மேல்.

– முகமது நபி –




## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

**கொழும்பு, ஒக்.28**

**இந்த ஆண்டின் ஜூன் மாதம்வரை வேலைவாய்ப்புகளுக்காக ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 37 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்வோரின் எண்ணிக்கை இந்த ஆண்டு வீழ்ச்சியடைந்துள்ளது.**

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆயிரத்து 149 பேர் வேலைவாய்ப்புக்காகச் சென்றிருந்தனர். இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 25 ஆயிரத்து 873 பேர் சென்றிருந்தனர். கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை அதிகம் என்றபோதும், அதன்பின்னர் பெப்ரவரி மாதம் முதல் வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டின் அதே மாதங்களுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சியையே பதிவுசெய்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 5 வீதம் குறைந்துள்ளது என்று அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## நீரில் மூழ்கி ஒருவர் பலி

கொழும்பு, ஒக்.28

ரஸ்நாயக்கபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முடத்தாவ வாவியில் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. உயிரிழந்தவர் 68 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ரஸ்நாயக்கபுரப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## இறக்குமதியாகியுள்ள 3,500 தொன் பொன்னி

கொழும்பு, ஒக்.28

உள்ளூர்ச் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரிச்சம்பா அரிசி பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக 3 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் பொன்னிச் சம்பா அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கைச் சுங்கம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்தொகுதி கடந்த 23ஆம் திகதி நாட்டுக்கு வந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பொன்னிச் சம்பா அரிசியின் மற்றுமொரு தொகுதி கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

உள்ளூர்ச் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரிச் சம்பா அரிசி பற்றாக்குறைக்குத் தீர்வாக, பொன்னிச் சம்பா அரிசியை கடந்த 15ஆம் திதகி முதல் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (ச-இ)

## சீரற்ற காலநிலையால் 31,623 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஒக்.28

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 7 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 623 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 வீடுகள் முற்றாகவும், 847 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மறுஅறிவித்தல் வரும் வரை கடற்படை மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களை ஆழ்கடல் பகுதிகளுக்குச் செல்லவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## வாகன விலைகளில் கணிசமான வீழ்ச்சி

கொழும்பு . ஒக்.28

இலங்கையில் வாகனங்களின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. வாகனங்களை வாங்குபவர்களுக்கு இதுவே சிறந்த நேரம் என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உபதலைவர் அரோஷ ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

நிதிக்கொள்கைகள் மற்றும் சந்தை நிலவரங்கள் காரணமாக வாகனங்களின் விலை குறைந்துள்ளது. ஜப்பானிய ஏலச் சந்தைகளில் இலங்கைக்குத் தேவையான வாகனங்கள் அதிக அளவில் நிரம்பல் செய்யப்படுவதால், ஏல விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன. உள்ளூர் இறக்குமதியாளர்களும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களைக் கொண்டுவந்துள்ளதால், சந்தையில் தேவைக்கு அதிகமாக வாகனங்களின் இருப்புக் குவிந்துள்ளது. அதனால் பொதுவாக ஒவ்வொரு வாகனத்தின் விலையும் 10 இலட்சம் ரூபா முதல் 15 இலட்சம் ரூபாவரையில் குறைவடைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**நாளை**

புதன்கிழமை - ஐப்பசி 12

29.10.2025

சுபநேரம் : 04.33 - 6.03

ராகுகாலம் : 12.03 - 01.33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைத் தக்கவைக்க மாகாணசபைத் தேர்தல் அவசியம்

## ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.28

**மாகாணத்தின் அதிகாரங்கள் பயன்படுத்தபடவேண்டும் என்றால், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தற்போது தேர்தலை நடத்துவதாயின், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணையை நிறைவேற்று வதன் ஊடாக, பழைய முறையில் தேர்தலை நடத்தலாம்.

ஆனால் ஆட்சியில் உள்ள அரசாங்கம் அதனை நிறைவேற்றுவதற்குத் தயாராக இல்லை. ஜனாதிபதிமாகாண சபைத்தேர்தல் தொடர்பில் எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்க வில்லை. அவர் மௌனமாக இருக்கின்றார். அமைச்சர்கள் தான் மாறி மாறி பலவிதமாக கருத்துகளைக் கூறிவருகின்றனர். தற்போது, மாகாணங்கள் ஆளுநர்களின் கைகளில் உள்ளன. ஆளுநர்கள் ஜனாதிபதி, அரசாங்கம் சொல்வதைச் செய்து கொண்டு இருக்கின்றனர். அவர்கள் அதனைத்தான் செய்யமுடியும். வேறு எதனையும் செய்யமுடியாது.

மாகாணசபையில் மக்கள் ஆட்சி தேவை என்பதை தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து அரசாங்கத்துக்கு அழுத்தமாகக் கூறவேண்டும். அவ்வாறான முயற்சி செய்யாவிட்டால், அரசாங்கம் மாகாணசபை தேவையில்லை என்பதைக் கூற முன்வந்து விடும். கிடைத்த அதிகாரம் மக்களால் பயன்படுத்தப்படவேண்டும். எனவே தேர்தல் நடாத்தப்படவேண்டும்-என்றார். (க-இ)

# கல்வி மறுசீரமைப்பு விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்து மௌனம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.28

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார்ந்த தரப்பினரால் எழுப்பப்பட்ட முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்காமல், அரசாங்கம் மௌனமாகவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளதாவது-

தொழிற்சங்கங்கள் கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் மற்றும் சிக்கல்களை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதற்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, தற்போது 9 மாகாணங்களுக்கும் காண்பிக்கப்பட்ட அதே திட்டத்தை மீண்டும் நடைமுறைப் படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

கல்வி மறுசீரமைப்புகள் பல சிக்கல்களை ஏற்படுத்தும். புதிய பாடத்திட்டத்தின்கீழ் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்குக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு கூறியிருந்தாலும், அத்தகைய கட்டணம் எதுவும் இதுவரை செலுத்தப்படவில்லை.

அதனால் கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும்-என்றார். (க-இ)



# ஜகத் விதான அச்சுறுத்தலுக்கு குற்றக்குழு தொடர்பே காரணம்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.28

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசியல் காரணங்களால் அல்ல என பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களுடனான அவரது தொடர்புகளே இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆரம்ப விசாரணையில் இந்த அச்சுறுத்தல்கள் அத்தகைய தொடர்புகளுடன் தொடர்புடையவை என்பது தெரியவந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினருக்குத்தற்காலிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஜகத் விதானவின் கோரிக்கையைத் தொடர்ந்து, அவரது பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அச்சுறுத்தலின் மூலத்தை உறுதிப்படுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள நபர்களை அடையாளம் காணவும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன-என்றார். (எ-25-இ)



# செவ்வந்தியுடன் தொடர்பில்லை!

## சத்தியம் செய்கின்றார் சமல்

கொழும்பு, ஒக்.28

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ள செவ்வந்தியுடன் எந்தவொரு தொடர்புகளும் இல்லை என முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கணேமுல்ல சஞ்சீவ கொலைக்கு மூளையாகச் செயற்பட்ட இஷாரா செவ்வந்தி, நேபாளத்தில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமை பாராட்டத்தக்கது.

செவ்வந்தியுடன் ராஜபக்ச குடும்பத்தாருக்குத் தொடர்புள்ளதாக சிலர், தவறான தகவல்களைப் பரப்புகின்றனர்.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் பொய்யான தகவல்களால் எமது குடும்பத்துக்கு அநீதி இழைக்கப்படுகின்றது-என்றார். (ச-இ)

# ஆனந்த விஜேபாலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## வலியுறுத்துகின்றார் பிரேம்நாத் தொலவத்த

கொழும்பு, ஒக்.28

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் தொலவத்த, ஐக்கிய மக்கள் சக்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வெலிகம பிரதேசசபைத் தவிசாளர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகச் சுட்டிக்காட்டி, உரிய பாதுகாப்புக் கோரி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் எழுதி இருந்தார்.

எனினும், இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்த விடயத்தை பிரதான காரணமாகக் கொண்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் என்றார்-இதுதொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தனது நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை. (க-44)

# எதேச்சதிகாரத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் சமர்!

கொழும்பு, ஒக்.28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் எதேச்சதிகாரப் பயணத்தைக் கண்டித்தும், மக்களுக்கான ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்தியும் எதிர்க்கட்சிகள் கூட்டு அரசியல் சமரை முன்னெடுக்கத்தீர்மானித்துள்ளன.

இதுதொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பிரமாண்ட கூட்டத்தை (எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு) நுகேகொடையில் நடத்துவதற்குத் திட்மிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பை நடத்தியபோதே முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மேற்படித் தகவலை வெளியிட்டார்.

மக்களின் வாழும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் என நினைப்பவர்கள் நிச்சயம் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்-என்றார். (க44)

# அரசாங்கத்தை விரட்டுமாறு மக்கள் கோருகின்றனராம்!

## சு.கவின் சிரேஷ்ட உபதலைவர் கூறுகின்றார்

கொழும்பு,ஒக்.28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இந்த நாட்டை ஐந்து வருடங்களுக்கு ஆளக்கூடாது. எனவே அரசாங்கத்தை வீட்டுக்கு விரட்டி அடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாட்டு மக்கள் எம்மிடம் கோரிவருகின்றனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசாங்கத்துக்கு கடந்த ஒரு வருட காலப்பகுதியில் நாம் எவ்வித இடையூறையும் ஏற்படுத்தவில்லை. நாட்டை முடக்குவதற்கு இடமளித்தோம். வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு, எவ்வித் தடையையும் ஏற்படுத்தவில்லை. இந்த நாட்டுக்கு வரவேண்டாம் என்று வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு அறிவுறுத்தவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கத்துக்கு அவகாசம் வழங்கினோம். எனினும், உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசாங்கம் ஐந்து வருடங்களுக்குப் பயணிப்பதற்கு இடமளிப்பதற்கு நாம் தயார். ஆனால் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புமாறு வாக்களித்த மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இதுபற்றி எம்மிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்-என்றார். (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID


1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE /C1/2025/29 | Supply and Installation, Testing & Commissioning of Lighting Protection System for the "A" Block Building at Faculty of Management Studies and Commerce, University of Jaffna | 1.07 | 30 | C9 or above (Building Construction) OR EM5 or above (Electrical Installation - Low Voltage) | Rs. 12,000.00 26.02.2026 | Rs. 1,500.00 |
| 2 | YA/CWP/RE /C1/2025/30 | Refurbishment of Science Teachers Common Room at Faculty of Science, University of Jaffna | 1.53 | 30 | C9 or above (Building) | Rs. 16,000.00 26.02.2026 | Rs. 1,500.00 |
| 3 | YA/CWP/RE /C1/2025/31 | Completion of Lecture Theatre at Third Floor of the Department of Computer Science Block, Faculty of Science, University of Jaffna | 14.57 | 90 | C7 or above (Building) | Rs. 150,000.00 26.02.2026 | Rs. 5,000.00 |
| 4 | YA/CWP/RE /C1/2025/32 | Supply and Installation of Air Conditioning System and Timber Floor at IDS Computer Lab., Faculty of Technology, University of Jaffna, Kilinochchi | 8.80 | 45 | C8 or above (Building) | Rs. 90,000.00 26.02.2026 | Rs. 3,000.00 |
| 5 | YA/CWP/RE /C1/2025/16 | Rehabilitation of Male Hostel Canteen Stage II, at Ariviyalnagar, Kilinochchi Premises, University of Jaffna | 6.69 | 60 | C8 or above (Building) | Rs. 70,000.00 26.02.2026 | Rs. 2,500.00 |
| 6 | YA/CWP/RE /C1/2025/33 | Supply and Installation of Air Conditioning System at Auditorium, Faculty of Technology, University of Jaffna | 16.57 | 60 | C7 or above (Building) OR EM4 or above Electrical Installation (Low Voltage) | Rs. 170,000.00 26.02.2026 | Rs. 6,000.00 |
| 7 | YA/CWP/RE /C1/2025/34 | Construction of Boundary Wall at Faculty of Technology, University of Jaffna | 8.66 | 60 | C8 or above (Building) | Rs. 90,000.00 26.02.2026 | Rs. 3,000.00 |
| 8 | YA/CWP/RE /C1/2025/35 | Improvement of Food Court at Female Hostel, University of Jaffna, Kilinochchi | 4.18 | 60 | C8 or above (Building) | Rs. 45,000.00 26.02.2026 | Rs. 2,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field indicated in the above table with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 28th October 2025 until 12th November 2025 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "97000006000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 13th November, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 13th October, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 77 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 6th November, 2025 for the bid No. 01 to 03 and at the Engineering Services Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 07th November, 2025 for the bid No. 04 to 08.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,
27.10.2025

(R/46178) J-1

# மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

வவுனியா, ஒக்.28

வவுனியா கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியில் தோட்டக் காணி ஒன்றுக்குப் போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி யானை ஒன்று உயிரிழந்துள்ளது. நேற்றுக் காலை தோட்டத் துக்குச் சென்ற விவசாயி யானை ஒன்று இறந்துகிடந்ததை அவதானித்ததை அடுத்து கனகராயன்குளம் பொலிஸாருக் குத் தகவல் வழங்கினார். அதையடுத்து சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறியப்படுத்தப்பட்டதை யடுத்து திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-110)

## யாழ். பல்கலைக்கழக
# ஜனநாயக ஊழியர் சங்கத்தினர் ஒருநாள் வேலைநிறுத்தப் போர்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணப் பல்கலைகழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினர் பல்கலைக்கழக முன்றலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட் டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் நலன்கருதி அத்தியாவசிய சேவைகளான பாதுகாப்புச்சேவைகள், நீர் வழங்கள் சேவைகள், பரீட்சைகள் என்பன பாதிப்படையாதவாறு அத்துறைகளில் கடமையாற்றும் சங்கத்தின் ஊழியர்களில் தேவையான உறுப்பினர்கள் மட்டும் சேவையாற்றிக்கொண்டு ஏனைய ஊழியர்கள் போராட்டத்தில் பங்காற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்புவழங்கியஉறுதியின்படி, நியாயமானகோரிக்கைகளுக்கு ஓரிரு வாரங்களுக்குள் தீர்வு காணப்படாவிடில், தொடர்ச்சியான போராட்ட நடவடிக்கைகளுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்ப டும் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-25)

# வாகன விபத்தில் பொலிஸ் பலி!

கொழும்பு, ஒக்.28

வெல்லவாயப் பொலிஸ் பிரிவின் வெல்லவாயதனமல்வில வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். தனமல்வில திசையிலிருந்து வெல்லவாய திசைநோக்கிச் சென்ற இராணுவப் பேருந்தும் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வெல்லவாய, ராஜமாவத்தை யைச் சேர்ந்த 36 வயதான பொலிஸ் சார் ஜென்ட் எனத் தெரியவந்துள் ளது. (ச-இ)


**Room வாடகைக்கு**

Hospital - 1.5 Km
University - 1.5 Km
Nallur - 600m

மாணவிகள் விரும்பத்தக்கது

தொடர்பு: +4915736567047

(CS 59742) E

**வீடு வாடகைக்கு (3 Bed Rooms)**

இடம்: ஆடியபாதம் வீதி, கறிவேப்பிலை லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மாத வாடகை : Rs. 40,000.00
Advance : Rs. 200,000.00
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0094753645193
(Whatsapp இல் மட்டுமே தொடர்பு கொள்ள முடியும்)

(CS 4273) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 12 . 1952



மறைவு 21 . 10 . 2025

### யோகராஜா புவனேஸ்வரி

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா புவனேஸ்வரி அவர்கள் கடந்த 21.10.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - ராசாத்தியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோகராசாவின் அன்பு மனைவியும், லோகநாயகி (கைலாசபிள்ளையார் கோவிலடி), மா.லோகநாதன் (லண்டன்), தி.லோகேஸ்வரி (லண்டன்), சு.யோகராணி (நல்லூர்) ஆகியோரின் சகோதரரும், ல.திருக்குமார் (லண்டன்), பா.சுரேஷபவான் (நல்லூர்) ஆகியோரின் மச்சாளும், சு.மணிமாறனின் (லண்டன்) மாமியும், ம.கவிதா (லண்டன்), சு.மாதங்கி, சு.அட்சுதன் ஆகியோரின் பெரியம்மாவும், ம.நிகிஷா, ம.மகிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.20, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
077 667 3385
சுரேஸ் (மகன்) - 077 4919 766

(CS 30634) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1943



மறைவு 27 . 10 . 2025

### நடராசா சிவகாமிஅம்மை

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வட்டு கிழக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவகாமிஅம்மை அவர்கள் நேற்று (27.10.2025) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தில்லையம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, பாலேந்திரன், பாலகிருஷ்ணன், பாலேஸ்வரன், பாலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், குலஜோதி, லங்காஜினி, பங்கையம், சத்தியசீலன் ஆகியோரின் மாமியாரும், மதீசன் - ரேவதி, நம்யெகா, ஆதவி, சஞ்சுகா, அஞ்சனா, அனுபவன், கரிஸ்ணா, திருவெங்கடன், தட்சாயினி, நமணன், அபினுஷன், யோகினுஷன் ஆகியோரின் பேர்த்தியும், கனகாம்பிகை, காந்திமதி, ஜெகசோதி, காலஞ்சென்ற நாகதேவி, செல்வமலர், சிவயோகமலர், கணேசானந்தமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, திருநாவுக்கரசு, மயில்வாகனம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


வட்டு கிழக்கு
வட்டுக்கோட்டை

(CS/30633) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 699 6083

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 05 . 1948



மறைவு 26 . 10 . 2025

### தம்பிராஜா தம்பித்துரை

1ம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா தம்பித்துரை அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா-பவளம் ஆகியோரின் மூத்த புதலவனும், காலஞ்சென்றவர்களான அரிச்சந்திரன் -விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மருமகனும், மற்றும் ரேணுகா அவர்களின் அன்புக் கணவரும் நிமல்ராஜா (லண்டன்), நிரோஷன் (லண்டன்), நிர்மலகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகௌரி (லண்டன்), மனோகரன், நிர்மலாதேவி (லண்டன்) பாலசுப்பிரமணியம் (கனடா) பத்மநாதன் (அமெரிக்கா) சந்திராதேவி (ஜேர்மனி) உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகலிங்கம் (லண்டன்), ரத்தினமலர், பூபாலசிங்கம் (லண்டன்), ரஞ்சினி (கனடா); லோகாம்பிகை (அமெரிக்கா) புஷ்பநாதன் (ஜேமனி), நிலாந்தி (வண்டன்), காலஞ்சென்ற சந்திரதாஸ், மற்றும் நவீந்திரதாஸ், ராதிகா, யோகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிக்கீதா, அமீலியா, ஆரியன், கிரிஷ், ரதீக் ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
0777 041 570
076 357 3606

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1953



மறைவு 27 . 10 . 2025

### வடிவேலு மகேந்திரராசா

(கட்டிடத் திணைக்கள (குருநகர்) முன்னைநாள் பாதுகாப்பு ஊழியர்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு மகேந்திரராசா ( கட்டிடத் திணைக்கள (குருநகர்) முன்னைநாள் பாதுகாப்பு ஊழியர்) அவர்கள் நேற்று (27.10.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு-லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சபாபதி - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராசதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவமணி மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராசமணி, காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் இராசதுரை, இராசபூபதி, இராமச்சந்திரன், காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும், தாரணி (மாகாணக் கல்வித் திணைக்களம்), வேணுசபா (அபான்ஸ் நிறுவனம், வவுனியா), டிவகலால் (லிக்ரோ காஸ் நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசீஸ்வரன் (கோண்டாவில் டிப்போ), கஜனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சலீனா, அக்ஷரா (ஏஞ்சல் இன்ரநஷநல் School) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(CR 46181) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிகளின் மாநாடு; சஜித் தரப்பு விலகல்!

கொழும்பு, ஒக். 29
எதிரணிகளால் எதிர்வரும் 21ஆம் திகதி நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது எனத் தெரியவருகின்றது. அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் இந்த மாநாட்டை எதிரணிகள் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

# கைவிடப்பட்ட கைக்குண்டுகள் மட்டக்களப்பில் மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 28
மட்டக்களப்பு வாழைச்சேனை பொலன்னறுவை பிரதான வீதியிலுள்ள வாகனேரி 125ஆவது மைல்கல்லை அண்டிய காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் இவை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுகிழமை மீட்கப்பட்டுள்ளன என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட கைக்குண்டுகளை நீதிமன்ற உத்தரவை பெற்றுச் செயலிழக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-25-இ)

# மாமனார் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு

அநுராதபுரம், ஒக். 28
அநுராதபுரத்தில் கலென்பிந்துனுவெவப் பகுதியில் மாமனாரின் கட்டுத் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மருமகன் உயிரிழந்துள்ளார் என்று கலென்பிந்துனுவெவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# நெடுஞ்சாலையில் விபத்து ஒருவர் பலி; இருவர் காயம்

கொழும்பு, ஒக். 28
மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விபத்து நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றது. கார் ஒன்று முன்னால் பயணித்துக்கொண்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

யாழ். தமிழ்ச்சங்க ஏற்பாட்டில்

# பாடசாலைகளிடையே விவாதச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 28
தமிழறிஞரும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபருமாகிய கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் வடமாகாணப் பாடசாலைகளிடையே விவாதச் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்ற ஆர்வமுடைய பாடசாலைகள் போட்டியாளர் முழுப்பெயர், பொறுப்பாசிரியர் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தமது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 8.11.2025 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கச் செயலாளர் கோரியுள்ளார். மேலதிக விவரங்களுக்கு போட்டி இணைப்பாளர் தெ. ஹர்சனின் 0759556041 / 0767556041 என்ற இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளலாம். தேசியமட்டத் தமிழ்த்தினப் போட்டிகளின் சுற்றுநிருபத்தைத் தழுவிய நிலையில் நவம்பர் மாத இறுதியில் போட்டிகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

# குளவி கொட்டி ஒருவர் சாவு!

கொழும்பு, ஒக். 28
பொகவந்தலாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புல் வெட்டச் சென்ற தோட்டத் தொழிலாளி ஒருவர் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். 69 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# ஹைஏஸ் விபத்து; சாரதி உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 28
வெலிக்கந்தை கட்டுவன்வில வீதியில் இடம்பெற்ற ஹைஏஸ் வாகன விபத்தில் சாரதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
கட்டுவன்வில நோக்கிச் சென்ற ஹைஏஸ் வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் வெலிக்கந்தைப் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிக்கந்தப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 02 . 1952

மறைவு 27 . 10 . 2025

**சிவலிங்கம் சிவமூர்த்தி**

**(உரிமையாளர் - ஸ்ரீசிவாஞ்சனா நகையகம்)**

மட்டக்களப்பு ஒந்தாச்சிமடத்தை பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் - சிவமூர்த்தி அவர்கள் நேற்று (27.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூபாலு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதி அவர்களின் பாசமிகு கணவரும், ஜீவராணி, திருமகள், கிஷோக்குமார், நாகேந்திரன், கிஷாஹினி, சுகந்தராஜா (அப்பன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன், சதீஸ்கரன், பிரியதர்சினி, சாவித்திரி (பாமா), அருள்கோடீஸ்வரன், மயூரா ஆகியோரின் அன்பு மாமனாரும், லாஞ்சனா, கஜவதனன், ராமஸ்ரீ, துஷாரஹா, தரணியா, சரபின், ஸ்ரீனா, அபிஷனா, தேனீகா, தட்ஷனியா, துளசிகா, ஹரித்திரேசன், லெஜினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

G.P.S வீதி
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர்
077 724 2230
077 539 3682

(CS/59741) J-1

## பதினொன்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 . 10 . 1927

உதிர்வு 02 . 11 . 2011

வட்டு வடக்கூரின் வள்ளலென வாழ்ந்திருந்து கட்டுக்குலையாத கண்ணியவான் கொடை வள்ளல்

**உயர்திரு வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**

(சங்கானை பாக்கியரத்தினம் காட்வெயாஸ் உரிமையாளர்)
தரன் ரேடேஸ் யாழ்ப்பாணம், பணிப்பாளர் Jet Steal Colombo - 12

அவர்களை நினைவு கூர்வோம்

திதி : ஸப்தமி

வட்டு வடக்கு,
சித்தங்கேணி

உயிரில் கலந்த
குடும்பத்தினர்

(CS 59733) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வெட்டித்துறையில்

# மூதாட்டியொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 28

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பிறேமச்சந்திரன் வதனராணி (வயது-73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

குறித்த மூதாட்டி வசித்துவந்த வீட்டில் துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்களால் வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை வல்வெட்டித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-100)

# சட்டச்சிக்கலுக்குத் தீர்வு காணப்படின் அடுத்த காலாண்டில் மாகாணத் தேர்தல்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.28**

**இந்த ஆண்டுக்குள் மாகாணசபைச் சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படின், அடுத்தாண்டு முதல் காலாண்டில் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவறுகளால் மாகாணசபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்படவில்லை. நாடாளுமன்றில் இயற்றப்பட்ட புதிய தேர்தல் முறைமையால் ஏற்பட்ட சட்டச்சிக்கலால், மாகாண சபைத் தேர்தலை எந்தமுறையில் நடாத்துவது என்பதில் சிக்கல் ஏற்பட்டது. மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் உயர் நீதிமன்றில் வியாக்கியானம் கோரப்பட்டபோது, நாடாளுமன்றின் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்று உயர்நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியுள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதிகளான ஆளுநர்களால், மாகாண சபைகள் நிர்வகிக்கப் படுவது ஜனநாயக அம்சங்களுக்கு, முரணானது என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றோம். மாகாணசபைத் தேர்தல் குறித்து இதுவரை காலமும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அரசியல் தரப்பினர் தற்போது விசேட கரிசனை கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நாட்டில் சட்டம் ஒன்று இல்லை.

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்டச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் எமக்குத் தெரியவில்லை. எனவே தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்தால் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடாத்த முடியும்-என்றார். (க-இ)


## University of Jaffna
## INVITATION FOR BIDS
### Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna - 2026

1. The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 10.00 am on **14th November, 2025** from the eligible Firms.

| Contract No (1) | Service (2) | Yearly Estimated Cost ( Rs. in Mn) excluding VAT (3) | Past Experience | | | Bid Security Rs. (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | One similar contract Rs. in Mn (4) | Annual average volume Rs. in Mn (5) | Trained staff available (6) | |
| UJA/CWP/CS/ 2026/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2026 (Jaffna) | 82.0 | 10.0 | 30.0 | 75 | 820,000.00 |
| UJA/CWP/CS/ 2026/02 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2026 (Kilinochchi) | 31.5 | 5.0 | 15.0 | 30 | 400,000.00 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

   3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

   3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than the value indicated in column 4 above against each contract.

   3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least the value indicated in column 5 above against each contract.

   3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least the value indicated in column 6 above against each contract.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, **until 28th November, 2025** from 9:00 hrs to 16:00 hrs upon payment of a **non-refundable fee of Rupees fifteen thousand (Rs. 15,000/-) for bid No.** UJA/CWP/CS/2026/01 and **Rupees eight thousand (Rs. 8,000/-) for bid No.** UJA/CWP/CS/2026/02 to be deposited to the People's Bank, University of Jaffna with the **Reference No "970000060000276"** should be filled in the **Account Number column** in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna. **All bids shall be accompanied by a bid security for the amount as indicated in column 6 for each contract** in Bank Guarantee valid for 119 days (should be as 13.03.2026) from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid or to be deposited to the People's Bank, University of Jaffna with the **Reference No "970000060000268"** should be filled in the **Account Number column** in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 10th November, 2025 at 10.00 hrs** in the board room of the University of Jaffna for **contract No** UJA/CWP/CS/2026/01 and **pre-bid meeting on 11th November, 2025 at 10.00 hrs** in the Engineering Service Division, Ariviyalnagar, Kilinochchi for **contract No** UJA/CWP/CS/2026/02 and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach before 10.00 hrs, **14th of November 2025.** Bids will be opened soon after closing the bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**
**27.10.2025**

(CR 46180) E


# சிறையிலுள்ள இலங்கையருக்கு மருத்துவ உதவி வழங்க உத்தரவு

## சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது

சிறைச்சாலையிலுள்ள இலங்கையருக்கு, அடிப்படை மருத்துவ உதவிகளை வழங்கவேண்டும் என்று புழல் சிறை நிர்வாகத்துக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இலங்கையைச் சேர்ந்த தனுக ரோஷன் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்தபோது உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

2019ஆம் ஆண்டு சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, தற்போது புழல் மத்திய சிறையில் விசாரணை கைதியாகவுள்ளேன். இலங்கையைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டவர்கள் ஒரே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு சுகாதாரமற்ற உணவு வழங்கப்படுகின்றது. அதைச் சுட்டிக்காட்டியதால், பழிவாங்கும் விதமாக, தனிமைச் சிறைக்கு மாற்றி அதிகாரிகள் எங்களைக் கொடுமைப்படுத்துகின்றனர் என்று அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு கடந்த சனிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, சுவாசப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட கைதிகளின் மருந்துகளை சிறை அதிகாரிகள் வலுக்கட்டாயமாகப் பறித்துச் சென்றுள்ளனர். அவர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள்கூட வழங்கப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டினார்.

மனுவை விசாரித்த நீதிபதிகள், மனுதாரருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க புழல் சிறை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர். இந்த மனுமீதான மேலதிக விசாரணை எதிர் வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி சர்வதேசத்தை நாடவுள்ளது எதிர்க்கட்சி

கொழும்பு, ஒக். 28
அரசியற் தலைவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறுகோரி, சர்வதேசத்தை நாடுவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன. அரச அலுவலகங்களுக்குள் புகுந்து மக்கள் பிரதிநிதிகள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அச்சமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அரசியற் தலைவர்களின் பாதுகாப்பே அச்சுறுத்தலில் உள்ளது என்றால், பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாங்கள் அச்சமடைகின்றோம்.
அரசாங்கம் ஆயுதக் குழுக்களையும், போதைப்பொருள் குழுக்களையும் ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அரசாங்கம் கூறுகின்றது. ஒரு கட்சியாக அரசாங்கத்தின் இந்தத் திட்டங்களை ஆதரிக்கின்றோம். அதேநேரம், ஆயுதக் குழுக்கள் என்ற போர்வையில் அரசியற் தலைவர்களை இலக்கு வைப்பதை தீர்க்கமாக எதிர்க்கின்றோம். நாட்டின் பாதுகாப்பை அரசாங்கம் விரைவில் உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையிலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் இது தொடர்பில் முறையிடுவோம் - என்றார். (அ-ம-44)

## மாகாணத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது. ஆனால், அதற்கு முன்னர்பலவிடயங்களுக்குத் தீர்வுகாண வேண்டிய தேவையுள்ளது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகண்ட பின்னரே தேர்தலை நடத்த முடியும். எனவே, அது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.
அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளதை முன்னிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட அனைவரையும் மீண்டும் தோற்கடிக்கக்கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. எதிர்க்கட்சிகளின் பொய்ப் பரப்புரைகளை இனியும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. எனவே, அவர்கள் மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்படுவது உறுதி - என்றார். (அ-ம-44)

## வடக்கின்...

ரயில் தண்டவாளங்களை சீர்செய்யும் நடவடிக்கையும், வடக்கின் ரயில் மார்க்கத்தைத் தரமுயர்த்தும் செயற்பாடுகளும் நாளைமறுதினம் தொடக்கம் ஒரு வாரத்துக்கு
முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தக் காலப் பகுதியில் காலை 10.15 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதையடுத்தே ரயில் சேவைகள் பகுதியளவில் இடைநிறுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)

## செம்மணிப்...

சமாதானத்துக்குமான பணிக்குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலேயே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-66-26)

## 11.600 கிராம்...

குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த வாகனமொன்றை பொலிஸார் இடைமறித்துச் சோதனையிட்டபோதே, மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரின் உடமையில் இருந்து 11 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைக்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
குறித்த நபர் கைது நடவடிக்கையில் இருந்து தப்புவதற்காகப் பொலிஸாருக்கு பெருந்தொகை இலஞ்சம் வழங்க முயன்றார் என்றும், அவர் இதற்கு முன்னரும் ஹெரோய்னுடன் தொடர்புடைய வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-26)

## மீளவும்...

யின் உபதவிசாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சாவகச்சேரியில் தனியார் காணியொன்றுக்கு முன்பாக குமரப்பா, புலேந்திரன் நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்தது. வீதியில் இருந்து நான்கு அடிகள் தூரத்திலும், தனியார் காணியின் எல்லைக்கு வெளியிலுமாக அந்தத் தூபி அமைக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த காணியின் உரிமையாளர் தனது காணியைப் பிரித்து விற்பனை செய்யும்போது, தூபிக்கு அருகாக வாயில் வரும் என்பதால் அதை இடித்து அழித்திருந்தார். தூபி மீள அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை அவர் வழங்கிய போதிலும் இன்றளவும் அது அமைக்கப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே, தூபியை மீளவும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-ச-27)

## உலகின்...

சுற்றுலா செல்வதற்கு மிகச்சிறந்த நகரங்களாகத் திகழக்கூடிய 25 நகரங்களைப் பட்டியலிட்டுள்ளது. அந்தப் பட்டியலிலேயே யாழ்ப்பாணமும் ஒன்றாகப் பெயரிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் நீண்டகால தனித்துவ பாரம்பரியத்தைக் கொண்ட இடம். அது உலகளாவிய ஈர்ப்பை எப்போதும் உறுதிப்படுத்தி வருகின்றது. யாழ்ப்பாணத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகள் மற்றும் உணவுப் பழக்கங்கள் என்றும் தனித்துவமானவை என்று 'லோன்லி பிளானட்' நிறுவனம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.
யாழ்ப்பாணத்தின் தனித்துவமும், அதற்குக் கிடைத்துள்ள அங்கீகாரமும், இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு அடுத்தவருடம் மிகையான பங்களிப்பைச் செய்யும் என்று 'லோன்லி பிளானட்' நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## தேசிய...

பொருள் வியாபாரம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் என்பவற்றுடன் தொடர்புடைய நபர்கள் அரசியலுக்கு வந்துள்ளனர். எதிர்காலத்தில் அவர்கள் தேசிய அரசியலுக்குள் வருவதற்கும் திட்டமிட்டுள்ளனர். இப்படியானவர்களுக்கு இடமளிப்பது தொடர்பில் கட்சிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். எனவே, குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பை வழங்காதிருப்பதற்கு கட்சிகளுக்கும் பெரும் பொறுப்புள்ளது.
போதைப்பொருள் வியாபாரிகள், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் கட்சி அரசியலுக்கு வந்த பின்னர், வெள்ளை ஆடைகளை அணிந்துகொண்டு கறுப்பு வேலைகளைச் செய்கின்றனர். எனினும் எவற்றையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம் - என்றார். (அ-ம-44)

## ஹெரோய்னுடன்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, சுன்னாகம் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்ட நிலையில், பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-27)

## வெளிநாடுகளில்...

நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் அமைச்சர் விஜித ஹேரத் கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போதே, 'புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன' என்று கூறியுள்ளார்.
வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் ஒவ்வொருவரும் தேர்தல்களில் பங்கேற்பதற்குத் தகுதியானவர்கள்.
எனவே, அவர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்திக் கொடுப்பதில் அரசாங்கம் மிகவும் அக்கறையுடன் உள்ளது. அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
நாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் சட்டச்சீரமைப்புகளில் புலம்பெயர் இலங்கையர்களின் வாக்குரிமை தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பான அடுத்தகட்ட அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

## இந்து...

வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வெள்ளி ஆட்டுக்கடாவாகனத்தில் எழுந்தருளி வெளிவீதியில் வலம்வந்து சூரசங்கார உற்சவம் நடைபெற்றது. (அ-ம-66)

## இணைய...

தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பொலிஸ் நிலையங்கள் அல்லது தபால் நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி, போக்குவரத்து அபராதங்களை எளிதாகவும், விரைவாகவும், பாதுகாப்பாகவும் இணைய வழியில் செலுத்த அனுமதிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு அதிக வசதியை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மாரப்பண, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், போக்குவரத்துப் பொலிஸார் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## தெற்குக்கு...

என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றஞ்சாட்டியுள்ளது.
முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதுதொடர்பில் தெரிவித்ததாவது:-
நாட்டின் தென்பகுதியில் ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன என்ற கறையை ஏற்படுத்திவிட்டு, வடக்குக்கு வெள்ளையடிப்புச் செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெறுகின்றது. ஆயுதக் குழுவின் செயற்பாடுகள், போதைப்பொருள்களின் பயன்பாடுகள் தொடர்பில் நாட்டின் தென்பகுதி மீது ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால், வடமாகாணத்தின் ஊடாகவே குற்றவாளிகள் தப்பிச் சென்றுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. புலம்பெயர் புலிகளைத் திருப்திப்படுத்தவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திமோர் தீவில் நில அதிர்வு

ஜகார்த்தா, ஒக்.28

இந்தோனேசியாவுக்கு அருகேயுள்ள திமோர் தீவில் சக்தி வாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று அதிகாலை 6.2 மெக்னிடியூட் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

எனினும் சுனாமி ஏற்படவாய்ப்பில்லை என்று நாட்டின் வானிலை, காலநிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கீரை விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

வலி. கிழக்குப் பிரதேசத்தில் கீரைச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பெய்த மழையால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கி அநேகமான இடங்களில் கீரைகள் அழுகிப் பழுதடைந்துள்ளன. இதனால் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

ஒரு பிடி கீரை 150 ரூபா முதல் 170 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. (ச-25, 17)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறுவர் முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.28

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் நாளை புதன்கிழமை கோப்பாய் மகாவித்தியாலயத்தில் காலை 8 மணிமுதல் பி.ப. 3 மணி வரை நடைபெறவுள்ளது என்று யாழ்.வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிறுவர் முகாமுக்குத் தங்கள் பாடசாலையிலிருந்து மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களை அழைத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் தீர்த்தோற்சவம், திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம், ஒக். 28

நீர்வேலி கந்தசுவாமிகோவிலில் கந்தசஷ்டி உற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும். நாளை புதன்கிழமை பி.ப. 6 மணிக்குத் திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். (ச-25, 17)



## போதைப்பொருள்களுடன் தருமபுரத்தில் மூவர் கைது

கிளிநொச்சி, ஒக்.28

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புச் சோதனையில் பெண் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸார் மற்றும் விமானப்படையினர் இணைந்து மோப்பநாய் சகிதம் இந்தச் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது 40 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவரும் 5 கிராம் 50 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவரும் 5 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-113)

## குவைத் விமானசேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.28

கடந்த 2021 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குவைத் விமானசேவை மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் பயணத்துக்காக ஏ -320 நியோ வகை விமானமொன்று குவைத்தில் இருந்து நேற்றுத் திங்கட்கிழமை கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வருகைதந்தது.

குவைத் விமானநிலையத்திற்கும் கட்டுநாயக்க விமானநிலையத்திற்கும் இடையிலான விமானங்கள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தலைதூக்குகிறது பாசிசவாத ஆட்சி!

*உதயகம்மன்பில தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.28

இலங்கையில் பாசிசவாதம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது எனப் பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் நிலவியதுபோல் இன்று இலங்கையில் பாசிசவாத ஆட்சி இடம்பெறுகிறது. இலங்கைப் பொலிஸார் ஜேர்மனியின் ஹிட்லரது ஆட்சிக்காலத்தில் இயங்கிய பொலிஸாரைப் போன்று செயற்படுகின்றார்கள்.

எதிர்பாராத விதமாக எதிர்பாராத நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த ஆட்சி அதிகாரம் கிடைக்கப்பெற்றது. ஜனாதிபதி அநுரகுமாரவுக்குள் மறைந்திருந்த ஹிட்லர் தற்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகாட்டத் தொடங்கியுள்ளார் - என்றார். (ச-இ)



## வடக்கு ஆளுநருடன் ரவிகரன் எம்.பி. சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28


நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.

சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்தில் காணப்படும் குறைபாடுகள், குறைபாடுகளைத் தீர்ப்பதற்குரிய உரிய நடவடிக்கைகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். (சு-246)


## மாவையின் ஜனனதினத்தில் பயன்தரு மரக்கன்று நடுகை

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் 83ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வலிகாமம் வடக்கு தச்சன்காட்டுச் சந்திக்கு அண்மித்த பகுதியில் வீதியின் இருமருங்கிலும் பயன்தரு மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. காங்கேசன்துறைத் தமிழரசுக் கட்சித் தொகுதிக் கிளையினரால் நேற்றுத்திங்கட்கிழமை இந்த நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது.

நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தமிழரசுக் கட்சி சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-66-159)



வாழ்த்துகின்றோம்




கரையூரை பிறப்பிடமாகவும் சுவீஸ் நாட்டில் வாழ்ந்துவரும் கோமஸ் வசந்தம் தம்பதிகளின் மகள்

மரியசைனா

சுவீஸ்நாட்டில் பிறந்து தன் தாய்மொழியை கற்று தமிழ் ஆசிரியராகவும், நாட்டிய தாரகையாகவும், சங்கீதம், நீச்சலில் சிறந்த மாணவியாகவும், சுவீஸ்நாட்டில் சிறந்த பட்டிமன்ற பேச்சாளராகவும், இன்று University of Zürich இல் படித்து மருத்துவராக பட்டம் பெறும் எனது அக்காவை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: தம்பி சாறூஸ்

(CS/59738) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org